# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 7/2020** **Date:09.03.2026.**

**(PW3)- மரிய தங்கம்**

**1,3 மற்றும்4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் வாதி எனது மருமகன் என்றால் சரிதான். எனது மருமகன் அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் என்ன என்றால் தெரியாது. வா.சா.ஆ. 5 ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளனோ என்றால் படித்து பார்க்கவில்லை. எனக்கு இந்த வழக்கை பற்றி எந்த விபரமும் தெரியாது என்றாலும் வாதி எனது மருமகன் என்பதால் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. வாதியின் சகோதரி குடியிருந்து வரும் வீட்டின் கதவு எண் என்றால் தெரியாது. எனது வா.சா.ஆ.5 ஆவணத்தில் கையெழுத்து செய்துயும் போது யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் சூசைமைக்கேல், பிரான்சிஸ், மரியம்மாள் மற்றும் நானும் உடன் இருந்தேன். எனது மருமகன் வீட்டிற்கு எப்போது சென்றேன் என்றால் நினைவில்லை. நான் வாதியின் வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும் எனது கணவர் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் இடவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவண்ததில் உள்ள கையெழுத்து எனது கணவரின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**